**இரண்டாவது நகரங்கள் கிராமிய சமூக அடிப்படை நீர் வழங்கல் மற்றும் சத்தீகரிப்புச் செயற்திட்டம் - 2012 (கடன் இலக்கம்-1993)**

**1. அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிசார் செயலாற்றல்**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டச் செலவு ரூபா 666,169,623 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு ரூபா 14,379,848,166 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவு, முன்னைய ஆண்டிற்கான செலவு மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு என்பவற்றின் பொழிப்பு கீழே காட்டப்படுகின்றது.

| விடயம் | டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவு | | 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 437,424,058 | 1,703,093,649 | 7,778,509,576 |
| உபகரணங்கள் மற்றும் பொருட்கள் | 76,542,220 | 1,375,397,001 | 4,373,218,687 |
| வாகனங்கள் | - | - | 56,516,200 |
| உசாத்துணைச் சேவைகள் | - | 39,069,036 | 892,672,433 |
| செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 13,098,817 | 3,825,625 | 96,687,349 |
| பயிற்சிகள் மற்றும் கற்கைநெறிகள் | (344,788) | 36,520,801 | 209,188,816 |
| ஆய்வுகள் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்ச்சி | (32,952) | 548,775 | 28,970,557 |
| வட்டிக் கட்டணங்கள் | 64,798,457 | 23,404,251 | 330,836,666 |
| அதிகரிக்கும் மற்றும் செயற்பாட்டுச் செலவினம் | 74,683,811 | 107,094,942 | 613,247,882 |
| | **666,169,623** | **3,288,954,080** | **14,379,848,166** |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்காக நிதியளிப்பு முகவரால் அறவிடப்பட்ட வட்டித் தொகையான ரூபா 190,673,987 ஏடீபீ இற்கும் ஜீஓஎஸ்எல் இற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் வட்டிச் செலவினமாகவும் ஏடீபீ இன் கடன் கணக்கிலும் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டிற்காக என்டபல்யூஎஸ்டீபீ இனால் செலுத்தப்பட்ட ரூபா 330,836,666 தொகை என்டபல்யூஎஸ்டீபீ இற்கும் ஜீஓஎஸ்எல் இற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட துணைக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் வட்டிச் செலவினமாகவும் செயற்திட்ட செலுத்தவேண்டிய வட்டியாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன்காரணமாக, வட்டிச் செலவினம் ரூபா 140,162,679 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன்

2012 ஆம் ஆண்டிற்கான ஏடீபீ கடன் ரூபா 190,673,987 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ஒன்பது ஒப்பந்தகாரர்களிற்குச் செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 306,446,148 தொகை பொதுத் திறைசேரியிடமிருந்து எவ்விதக் கடப்பாட்டினையும் கருத்தினையும் பெற்றுக்கொள்ளாது பெறவேண்டிய நிதியாகவும் இலங்கை அரசாங்கத்திடமிருந்தான பங்களிப்பாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஏடீபீ இனால் உதவியளிக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் சுத்தீகரிப்புச் (துறை) செயற்திட்டத்தின் செலவினங்களை மேற்கொள்வதற்காக பாரிய திருக்கோணமலை நீர் வழங்கல் செயற்திட்டத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 13,512,156 தொகை தவறுதலாக இச்செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒன்பது ஒப்பந்தங்களில் ரூபா 9,224,635,556 பெறுமதியான ஏழு ஒப்பந்தங்கள் அவற்றின் பூரணப்படுத்தப்பட வேண்டிய திகதிகளின் பட்டோலையுடன் ஒப்பிடுகையில் 10 மாதங்கள் முதல் 28 மாதங்கள் வரை தாமதிக்கப்பட்டிருந்தன.

(ஆ) குளக்கட்டுக்களை அதிகரித்தல் மற்றும் மட்டக்களப்பு அன்னிச்சைக் குளக் கட்டமைப்பு நிர்மாண ஒப்பந்தம் என்பன பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ளாது 2006 இல் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, ஒப்பந்தகாரரின் இயந்திரங்கள் பயன்படுத்தப்படாதிருந்தமை மற்றும் சிட்டைகளைத் தீர்ப்பதில் தாமதம் காரணமாக தாமதக் கொடுப்பனவாக ரூபா 55 மில்லியனை செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) ரூபா 2,669,899,236 கூட்டுத்தொகையான பெறுமதி கொண்ட இரண்டு ஒப்பந்தங்கள் ஒப்பந்தகாரரினால் என்டபள்யூஎஸ்என்ட்டீபீ இற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்ச்சியான பூரணப்படுத்தல் சான்றிதழ்கள், இறுதி பூரணப்படுத்தல் சான்றிதழ்கள் என்பன உத்தரவாதப் பொறுப்புக் காலத்திலிருந்து இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னரும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நீரைப் பாய்ச்சும் பிரதான விநியோகக் குளாயினை (10.5 கி.மீ) வழங்கிப் பொருத்துதல் மற்றும் ரூபா 1,162,504,731 பெறுமதியான உயர் நீர் (2 ஒப்பந்தங்கள்) ஒப்பந்த நிர்மாணம் ஆகியன 2009 இல் பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2011 செப்தம்பர் 30 அன்றே பூரணப்படுத்தப்பட்டிருந்தன. இருப்பினும், முன்னைய ஒப்பந்தத்துடன் இணைந்ததாக புரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய பிரதான வேலை ஒப்பந்தம், தூய நீர் பரிமாற்ற பிரதான வழங்கல் பொறி மற்றும் நீரைப் பாய்ச்சும் பிரதான ஒப்பந்தம் என்பன பூரணப்படுத்தபடாமை

காரணமாகவே அது தாமதமடைந்திருந்தது. 2013 யூன் 30 இல் உள்ளவாறு இவ்வொப்பந்தத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 42 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது.

### 3.3 சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடன் இணக்கமின்மை

செயற்திட்டச் சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு வருடந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்றின் படி நிலையான சொத்துக்களின் கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 121,876,034 ஆகும்.

### 3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

ஒவ்வொரு விடயத்திற்கெதிரேயும் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்படாமை காரணமாக கணக்குகளிலுள்ள பின்வரும் விடயங்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

| விபரம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| சுத்தீகரித்தல் | 111,567,148 | நலனாளிகளின் பட்டியல் |
| காணி, கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | 48,172,831 | உரித்தாவணங்கள் |

### 3.5 நிதியளிப்பு ஒழுங்குகள்

2003 இல் செயற்திட்டத்தின் மூலக் கிரயம் யூஎஸ்எஸ் 85.6 மில்லியனாகக் காணப்பட்டு 2010 இல் யூஎஸ்எஸ் 263.26 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டது. மிகைச் செலவினங்களை எதிர்கொள்வதற்கான ஒழுங்குகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ஏடீபீ | இலங்கை அரசாங்கம் | சமூகப் பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | யூஎஸ்எஸ் மில்லியன் | யூஎஸ்எஸ் மில்லியன் | யூஎஸ்எஸ் மில்லியன் | யூஎஸ்எஸ் மில்லியன் |
| தொடக்க உடன்படிக்கை (கடன் இல. 1993) | 60.3 | 22.2 | 3.1 | 85.6 |
| குறைநிரப்பு கடன் ஏற்பாடுகள் | | | | |
| கடன் இல. - 2275 | 13.5 | 5.6 | | 19.1 |
| - 2276 | 46.5 | 24.0 | | 70.5 |
| | 120.3 | 51.8 | | 175.2 |
| ஜீஓஎஸ்எல் இன் மேலதிக ஏற்பாடுகள் | | 57.09 | | 57.09 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 120.3 | 108.89 | 3.1 | 232.29 |
| குறைநிரப்பு கடன் ஏற்பாடுகள் | | | | |
| கடன் இல. - 2757 | 4.30 | 0.53 | | 4.83 |
| - 2758 | 13.30 | 1.64 | | 14.94 |
| தரப்பினர் வேறுபாடு | 11.2 | | | 11.2 |
| | **149.1** | **111.06** | **3.1** | **263.26** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 இன் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை பூரணப்படுத்துவதற்கு செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் யூஎஸ்எஸ் 85.6 மில்லியனாக காணப்பட்ட போதிலும், பொருத்தமற்ற கிரய மதிப்பீடு காரணமாக அந்த இலக்குகளை அடைவதற்கான கிரய மதிப்பீடு யூஎஸ்எஸ் 263.26 மில்லியனாக திருத்தப்பட்டது. ஆகையால் மொத்தக் கிரயம் 212 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் கூறுகளினால் செயற்திட்டத்திற்கான நிதியளிப்பு விகிதம் 1: 0.37 ஆக காணப்பட்டது. பின்னர் அரசாங்கத்தினால் குறைநிரப்பு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டமையால் இவ்விகிதம் 1: 0.74 ஆக மாற்றமடைந்தது. செயற்திட்டம் இது வரை பூரணப்படுத்தப் படாதிருந்ததுடன் வெளிநாட்டு நிதிகள் பயன்படுத்தப்பட்டு முடிந்திருந்தன. ஆகையால் எதிர்காலப் பொறுப்புக்கள் மற்றும் செலவினங்களை அரசாங்கத்தினால் பொறுப்பேற்க வேண்டியுள்ளதால் ஆரம்ப நிதியளிப்பு விகிதத்தில் பாரிய மாற்றம் ஏற்படுவதற்கு இது வழிவகுக்கும்.

## 4. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலவளங்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு முழுச் செயற்திட்ட காலத்தையும் உள்ளடக்கி மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு அடிப்படையில் இலக்குகளுக்கான பொறுப்புக்களை நிறுவுவதுடன் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளைச் கட்டிக்காட்டும் விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அவ்வாறான திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்திட்டத்தால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் செயலாற்றல் கீழே தரப்படுகின்றது.

| | ADB கடன் | இலங்கை அரசாங்கம் | சமூக அடிப்படை அமைப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| உடன்பட்ட பங்களிப்பு (யூஎஸ்எஸ் மில்லியனில்) | 60.3 | 58.5 | 3.1 | 121.9 |
| கூட்டுக: | | | | |
| தரப்பினர் வேறுபாடு | 9.9 | - | - | 9.9 |
| **மொத்தம்** | **70.2** | **58.5** | **3.1** | **131.8** |
| 2012 திசெம்பர் 31 வரை செயற்திட்டச் செலவினம் (யூஎஸ்எஸ் மில்லியனில்) | 70.2 | 56.5 | 6.1 | 132.8 |
| நிதிகளின் பயன்பாடு சதவீதமாக | 100 | 96.6 | 196.8 | 100.7 |

(இ) மீளாய்வாண்டிற்கான நிதியளித்தல் மற்றும் பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது நிதிகளின் பயன்பாடு, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு என்பவை தொடர்பான குறித்த சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | **ஏற்பாடு செய்வதற்கு உடன்பட்ட தொகை** | | **2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு** | **ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள்** | **2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் (காசு அடிப்படையில்)** |
|---|---|---|---|---|---|
| | **யூஎஸ்எஸ் (மில்.)** | **ரூபா (மில்.)** | **ரூபா (மில்.)** | **ரூபா (மில்.)** | **ரூபா (மில்.)** |
| ஏடீபீ | 70.17 | 8,174 | 58.35 | 56.11 | 7,656.67 |
| இலங்கை அரசாங்கம் | 58.52 | 6,597.6 | 882.23 | 783.22 | 5,966.06 |
| மொத்தம் | 128.69 | 14,771.9 | 940.58 | 839.33* | 13,622.73* |

* அட்டுறுச் செலவினங்களின் தாக்கங்கள் காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து மேற்படி தொகைகள் வேறுபடுகின்றன.

### 4.2 பௌதீக செயலாற்றல்

#### 4.2.1 ஒட்டுமொத்த பௌதீக செயன்முன்னேற்றம்

செயற்திட்டம் 2009 மார்ச் 31 அளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலபடுத்தப்பட்டது. இருப்பினும், பின்னர் செயற்திட்டக் காலம் 2011 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஏறத்தாழ 969,000 மக்களுக்கு பாதுகாப்பான நீர் வழங்கப்படுதலை அடைவதற்காக 16 ஒப்பந்தங்களை அமுல்ப்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், பணவீக்க தாக்கம் காரணமாக அது ஒன்பது ஒப்பந்தங்களிற்கு வரையறுக்கப்பட்டதுடன் எஞ்சிய 7 ஒப்பந்தங்களும் 4 குறைநிரப்பு கடன் உடன்படிக்கைளினூடக மேற்கொள்ளப்பட்டிருந்தன. திருத்தியமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் படி இந்த ஒன்பது ஒப்பந்தங்களையும்

பூரணப்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், திருத்தியமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டக் காலத்தில் சகல ஒப்பந்தங்களும் பூரணப்படுத்தப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | பொதி இலக்கம்/ செயற்திட்ட நடவடிக்கை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட இலக்கு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பௌதீகச் செயலாற்றல் | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | | % | % | % |
| **(i)** | **பிடபிள்யூ&ஈரீ/யூடபிள்யூஎஸ்/ பிஏ3/எச்ஏஎம்/ஐசீபீ** | | | |
| | பிரதான வேலைகள், மத்திய பிரதான நீர் பரிமாற்றம், சுத்திகரிப்பு பொறி (15,000 m3/நாள்) மற்றும் பிரதான சுத்திகரித்த நீரைப் பாய்ச்சும் குளாய் (பொறி மற்றும் வடிவமைப்பு கட்டியெழுப்பல் அடிப்படை) என்பவற்றை நிர்மாணித்து பூரணப்படுத்தல் | 100 | 100 | - |
| (ii) | **பிடபிள்யூ&ஈரீ/யூடபிள்யூஎஸ்/ பிஏ4/எச்ஏஎம்/ஐசீபீ** | | | |
| | அம்லந்தோட்டையிலிருந்து மிரிஜ்ஜவில வரையான D1 நீர்மாற்ற 500mm டீ1 பிரதான வழியினை (47 கி.மீ) வழங்குதலும் அமைத்தலும் | 100 | 100 | - |
| (iii) | **எச்டபிள்யூ&ரீ/யூடபிள்யூஎஸ் பீடீ1/பீஏரீ/ஐசீபீ** | | | |
| | உன்னிச்சை குளத்தின் கட்டமைப்புடன் தொடர்புடைய ஏனைய குளக்கட்டினை உயர்த்துதல் | 100 | 100 | - |
| (iv) | **பீடபிள்யூ&ஈரீ/யூடபிள்யூஎஸ் பீஈ1/பீஏரீ/என்சீபீ** | | | |
| | வலயங்களில் விநியோக முறைமையினை வழங்கி அமைத்தல் 1, 2, 5 மற்றும் 6(பகுதி ஏ) | 100 | 100 | - |
| (v) | **பீடபிள்யூ&ஈரீ/யூடபிள்யூஎஸ் பீஈ2/பீஏரீ/என்சீபீ** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வலயங்களில் விநியோக முறைமையினை வழங்கி அமைத்தல் 3, 4, 7 மற்றும் 8 (பகுதி பீ) | 100 | 100 | - |
| (vi) | **டிஆர்/யூடபிள்யூஎஸ்/பிஜீ1/பீஏரீ/என்சீபீ** | | | |
| | சுத்திகரித்த நீர் வடிகாலமைப்பு மேம்படுத்தலை நிர்மாணித்து முடிவுறுத்துதல் | 100 | 100 | - |
| (vii) | **எஸ்ஈ/யூடபிள்யூஎஸ்/பீஎச்1/பீஏரீ/எல்சீபீ** | | | |
| | குளாய் வழிகள் மற்றும் பொதி உள்ளடக்கல் / திடப்படுத்தல் சுத்திகரிப்பு பொறியினை வைத்தல் அடங்கலாக மட்டக்களப்பு வைத்திய சாலைக்கும் சிறைச்சாலைக்கும் கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமையினை நிர்மாணித்துப் பூரணப்படுத்துதல். | 100 | 100 | - |
| (viii) | **எச்டபிள்யூ&ரீ/யூடபிள்யூஎஸ் பிஈ3/எம்யூரீ/ஐசீபீ** | | | |
| | சுத்திகரித்த நீர் பாய்ச்சல் பிரதான விநியோகக் குழாய்களை வழங்கி வைத்தல் (10.5 கி.மீ.) மற்றும் உயர்த்தப்பட்ட தண்ணீர் கோபுரத்தின் நிர்மாணம் (02) | 100 | 100 | - |
| (ix) | **எச்டபிள்யூ&ரீ/யூடபிள்யூஎஸ் பிஈ5/பீஓஎல்/ஐசீபீ** | | | |
| | பிரதான வேலைகள், சுத்திகரித்த நீர் பரிமாற்ற பிரதான வழி (4 கி.மீ), சுத்தீகரிப்புப் பொறி (13,500m3 /நாள்) மற்றும் சுத்தீகரிக்கப்பட்ட நீர் பரிமாற்ற பிரதான வழி (11 கி.மீ) என்பவற்றை நிர்மாணித்து பூரணப்படுத்துதல் மற்றும் ஏற்கனவே உள்ள சுத்தீகரிப்புப் பொறியினை புனரமைத்தல். (பொறி மற்றும் வடிவமைப்பு கட்டியெழுப்பல் அடிப்படை) | 100 | 100 | - |

### 4.2.2 கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார நிகழ்ச்சித்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சுகாதார நிகழ்ச்சித்திட்டம்**

ஆரம்ப கட்டத்தில் 32,572 குடும்பங்களிற்கு சுகாதார வசதிகளை வழங்குவதற்காக ரூபா 135 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது ஆயினும், ரூபா 126 மில்லியன் மாதத்திரம் வழங்கப்பட்டு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டக் கால முடிவில் 22,511 குடும்பங்களிற்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம் வருமாறு.

| | கழிவறைகளை நிர்மாணித்தல் | | | |
|---|---|---|---|---|
| **மாவட்டம்** | **ஆரம்ப இலக்கு (கழிவறைகளின் எண்ணிக்கை)** | **திருத்தப்பட்ட இலக்கு (கழிவறைகளின் எண்ணிக்கை)** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூரணப்படுத்தல் (கழிவறைகளின் எண்ணிக்கை)** | **%** |
| அநுராதபுரம் | 12,722 | 9,605 | 8,984 | 93 |
| பொலன்னறுவை | 13,650 | 9,895 | 9,415 | 96 |
| மட்டக்களப்பு | 2,700 | 2,382 | 1,680 | 71 |
| ஹம்பாந்தோட்டை | 1,500 | 1,092 | 1,098 | 101 |
| மூதூர் | 2,000 | 1,573 | 1,334 | 85 |
| **மொத்தம்** | **32,572** | **24,547** | **22,511** | **92** |

ஆரம்பத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் உள்ளபடியான செயலாற்றலுடன் பொருந்தும் வகையில் மூல இலக்குகள் குறிப்பிடத்தக்களவில் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டிருந்தன.

**(ஆ) நிறுவகரீதியான அபிவிருத்தி**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதி முகாமைத்துவம் மற்றும் வழங்கப்படுகின்ற சேவைகளான விழிப்புணர்வுக் கல்விப் பேரணி, நிதி மற்றும் செயற்பாட்டு மேம்படுத்தல் ஆதரவு போன்றனவற்றை மேம்படுத்துவதற்காக குரித்துரைத்த தந்துரோபாயங்களிற்கு ஆதரவு வழங்குவதே நிறுவக ரீதியான பலப்படுத்தல் கூறின் எதிர்பார்ப்பாகும். பாதீட்டு ஒதுக்கீட்டின் படி, 2009 இல் ரூபா 300 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவக ரீதியான அபிவிருத்திக்காக ரூபா 209 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஆகையால், மீகுதி நிதியான ரூபா 81 மில்லியன் நிறுவக ரீதியான பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.